# போடிநாயக்கன்பட்டி ஊராட்சி தலைவரின் நடவடிக்கைகள்

## முன்னிலை – திரு. P.L. பெரியசாமி

ந. க. எண். 03/2023/ ஊராட்சி நிர்வாகம் நாள்: 01.09.2023

பொருள்:

மனைப்பிரிவு அங்கிகாரம் – நாமக்கல் மாவட்டம் – எருமப்பட்டி வட்டாரம் – போடிநாயக்கன்பட்டி ஊராட்சி – சர்வே எண் 139/3B2, 139/3C2 – ல் 1.10 பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்க்கான தொழில் நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது - இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண் **79**. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, ந. வ. 4 (3) துறை நாள் – **04.05.2017**
2. அரசாணை (நிலை) எண். 112, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, ந. வ. 4 (3) துறை நாள் – **22.06.2017**
3. அரசாணை (நிலை) எண் **138**. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, ந. வ. 4 (2) துறை நாள் – **04.06.2004**.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடித இ. ந. க. எண். **NKLBAMJQBQ/7903/2022 25.3.2023, SW/DTCP/NKL/Layout No. 103/2023** நாள் – **25.3.2023**
5. தானப்பத்திர ஆவண எண். **183/2023** நாள் - **30.01.2023**
6. தனியாரால் வழங்கப்பட்ட ரூ. **20**/- க்கான உறுதிமொழி பத்திரம்.
7. கூராய்வுக் கட்டணமாக போடிநாயக்கன்பட்டி ஊராட்சிக்கு செலுத்திய நாள் – **31.8.2023** (பலவகை இரசீது எண். **015464**)
8. நகர் ஊரமைப்புத் துறைக்கு உரிய கட்டணம் (3 % Market value) செலுத்தப்பட்ட இசலான் எண். **20230830006364**

**************

பார்வை (1) மற்றும் (2) ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி வட்டாரம் போடிநாயக்கன்பட்டி ஊராட்சி கிராமம் சர்வே எண்கள்: **139/3B2,3C2** ல் **1.10** ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைபடுத்தப்பட்டு நாமக்கல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ஒப்புதலின்படி மனைப்பிரிவிற்கு வரைபட எண்ணிட்டு **SWP/DTC/NKL/Layout No. 116/2023** தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைபிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு பார்வை 5 இல் காணும் தானப்பத்திரம் மூலம் எருமப்பட்டி சார்பதிவாளர்

அலுவலகத்தின் முலமாக போடிநாயக்கன்பட்டி ஊராட்சிக்கு தானமாக பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

போடிநாயக்கன்பட்டி ஊராட்சி மன்றத் தீர்மான எண் **201/2023** நாள் **01.09.2023** இன் படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற்று கொள்ளப்பட்டதிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சாலைகள் பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கும் சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கும் உட்பிரிவு கட்டணத்தொகையினை செலுத்த மனுதாரரால் பார்வை – 6 இல் கண்டுள்ளவாறு ரூ. 20/- கான ஒப்புதல் பத்திரம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது.

பார்வை – 7 – ல் கண்டுள்ளவாறு கூராய்வுக் கட்டணம் **22** மனைகளுக்கு ரூ. **22000** (ரூபாய் இருபத்து இரண்டாயிரம் மட்டும் )மற்றும் மனை உட்பிரிவிற்கு **3% Market value** கட்டணம் பார்வை 8 –ல் கண்டுள்ளவாறு ரூ. **44500 (ரூபாய் நாற்பத்து நான்காயிரத்து** ஐநூறு மட்டும்) உரிய அரசுத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே நாமக்கல் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு வரைபட தொழில்நுட்ப அனுமதி **SWP/DTDP/NKL/Layout No. 116/2023** – ல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள், மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மேற்காணும் நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரம் இரத்து செய்திடவும் அதிகாரம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்,
ஊராட்சி மன்றம்,
போடிநாயக்கன்பட்டி.

பெறுதல்:

ஒர்க்கமலை,
த/ பெ ஆறுமுகம் ,
1/99 வடக்கு தெரு,
போடிநாயக்கன்பட்டி,
சேந்தமங்கலம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

நகல்

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் (அவர்களுக்கு பணிந்து அனுப்பபடுகிறது)
2. சார்பதிவாளர் அலுவலகம், எருமப்பட்டி நாமக்கல் மாவட்டம். (அவர்களுக்கு அனுப்பபடுகிறது)
3. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்). நாமக்கல்
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ ) எருமப்பட்டி வட்டாரம். (தகவலுக்காக)

நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியம்,

## போடிநாயக்கன்பட்டி ஊராட்சி மன்றம்.

### சாதாரண / அவசர சிறப்புக் கூட்டம்

தீர்மான எண்: 201

**தீர்மான நகல்**

நாள்: 01. 09. 2023.

2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ம் தேதி வெள்ளி கிழமையன்று காலை/~~மாலை~~ 10.00 மணிக்கு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஊராட்சி மன்ற தலைவர் திரு. P.L. பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள் விபரம்.

மொத்த உறுப்பினர்கள்: 9 வருகை தந்த உறுப்பினர்கள்: 9

| பொருள் 23 | தீர்மானம் 201/2023 |
|---|---|
| போடிநாயக்கன்பட்டி ஊராட்சி சர்வே எண் 139/3B2 139/3C2, அளவும் 1.10. ஏக்கர் பரப்பளவில் மனைபிரிவு அமைப்பதற்கு. மனைபிரிவின் உரிமையாளர் மற்றும் மனை மடக்கு, பூங்கா, பொதுஇடம் உட்பட அனைத்தும் ஊராட்சிக்கு திருமதி. 1. ஜெயசித்ரா 2. V. மருதை 3. M. ராஜா 4. A. சொர்ணமணி (4 நபர்கள்) அவர்கள் சேர்ந்து தானபத்திரம் மூலம் ஒப்படைத்ததால் மன்ற அனுமதி கோரப்படுகிறது | அனுமதிக்கப்பட்டது. |

உண்மை நகல்

P.L. பெரியசாமி
தலைவர்
போடிநாயக்கன்பட்டி ஊராட்சி

உண்மை நகல்